## விளம்பரப் பலகைகளில் தேசிய மொழி இல்லை

# ஐந்து கடைகளுக்கு அபராதம்




கோலாலம்பூர், அக். 14-

விளம்பரப் பலகையில் தேசிய மொழியை பயன்படுத்தாத கடைகளுக்கு எதிராக கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விதிமுறைகளை பயன்படுத்தாத புக்கிட் பிந்தாங்கில் உள்ள ஐந்து கடைகளுக்கு அதன் அமலாக்கப் பிரிவினர் சம்மன்களை சார்வு செய்துள்ளனர்.

தலைநகர், ஜாலான் இம்பியில் மேற்கொண்ட சோதனையின் போது ஐந்து கடைகள் அதன் விதிமுறையை மீறி உள்ளதாக அது கூறியது. அனைத்து கடைகளும் 1982ஆம் ஆண்டு சிறிய சட்டவிதிகளை மீறும் வகையில் விளம்பரப் பலகைகளில் தேசிய மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்ற விதிமுறையை புறக்கணித்துள்ளதாக அது கூறியது.

அவர்கள் தங்களின் விளம்பரப் பலகைகளில் வேறு மொழியை பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் அவசியம் தேசிய மொழியை பயன்படுத்த வேண்டும் என்ற நினைவூட்டும் வகையில் இந்த சம்மன்கள் சார்வு செய்யப்பட்டுள்ளதாக அது கூறியது.

வரும் 14 நாட்களுக்குள் அவர்கள் தங்களின் விளம்பரப் பலகைகளில் தேசிய மொழியைப் பயன்படுத்தாவிடில் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அது எச்சரித்தது.

1982 ஆம் ஆண்டு கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் சட்டவிதிகளை அவசியம் பின்பற்ற வேண்டும் என்பதை வியாபாரிகளுக்கு நினைவூட்டும் வகையில் இது போன்ற சோதனை மேற்கொள்ளப்பட்டதாக அது கூறியது.

தேசிய மொழியை பயன்படுத்தாமல் இருக்கும் விளம்பரப் பலகைளுக்கு எதிராக பொதுமக்கள் புகார் செய்யலாம் எனவும் அது கேட்டுக் கொண்டது. இந்த சட்டவிதிமுறைகள் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அகப்பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடைகளில் பொருத்தப்படும் விளம்பரப் பலகைகளுக்கு தேசிய மொழிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என அந்த அறிக்கை கூறியது. விளம்பரப் பலகைகளில் வேறு மொழிகள் பயன்படுத்தி வந்தாலும் கூட அவை தேசிய மொழியை விட சிறிய எழுத்தாக இருக்க வேண்டும் எனவும் அது விளக்கம் அளித்தது.